**17.12.2024**

**O.S.No.105/2011**

**பி.வா.சா.1 : இளங்கோ**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) என் அப்பா பெயர் நடேசன். ஆதியில் இந்த சொத்து நடேசன் பெயரில் தான் இருந்தது. அவருக்கு 2 மகன்கள், 1 மகள் வாரிசுகள். நடேசனின் மனைவி பெயர் நல்லதங்காள். இந்த வாதி தான் மேற்படி நடேசனின் ஒரே மகள். என் அப்பா இறந்த பின்னிட்டு தான் நானும் என் சகோதரரும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். 12.11.1997 ல் பாக பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் அது விடுதலை பத்திரம். 2010 ல் பாகபத்திரம் எழுதிக்கொண்டோம்.

2) வாதி தான் எங்களுக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார். அது பதிவு செய்யப்படாத விடுதலை பத்திரம். நான் சொல்லும் விடுதலை பத்திரம், பாக பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 17.08.1999 ம் தேதி பாக பத்திரம் ஆனது பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரம் என் பெரியப்பா, சித்தப்பா, என் அப்பா ஆகிய 5 பேருகளுக்குள் ஏற்படுத்தப்பட்டது.

3) நான் சொல்வது போல் 5 பேர் அதை எழுதவில்லை என்றும், பெருமாள், இளங்கோ, ராமசாமி மற்றும் பாலகிருஷ்ணன் ஆகிய 4 பேர்கள் தான் எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். நடேசன் அந்த சமயத்தில் இறந்துவிட்டார். மேற்படி பதிவு செய்யப்படாத

பத்திரத்தின் படி அதில் குறிப்பிட்டுள்ள சொத்துகளில் எவ்விதமான சட்டப்படியான உரிமையும் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4) 13.05.2010 ல் எழுதிக்கொண்ட பாக பிரிவினை பத்திரம் இளங்கோ மற்றும் பாலகிருஷ்ணன் இடையே எழுதப்பட்ட பதிவு செய்யப்பட்டது. அதில் என் அம்மாவோ, வாதியோ கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். 13.05.2010 ல் எழுதிய பாக பத்திரம் செல்லதக்கது அல்ல என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதற்கு பதிலாக வாதிக்கு ஈடாக ஒரு வீட்டு மனையும், அம்மாவுக்கும் ஜீவனாம்சமாக வீடும் ஒதுக்கப்பட்டது. அந்த விவரத்தை மேற்படி 13.05.2010 ம் தேதி பாக பத்திரத்தில் சொல்லவில்லை.

5) மேற்படி பாக பத்திரத்தில் என் அம்மாவையோ, என் சகோதரியோ சேர்த்து எழுதவில்லை என்றால் சரிதான். என் சகோதரிக்கு நான் ரூ.3 இலட்சம் செலவு செய்து திருமணம் செய்து வைத்தற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்படாத விடுதலை பத்திரங்களில் ஒரு பத்திரத்தில் பரமேஸ்வரி ஆங்கிலத்திலும், ஒரு பத்திரத்தில் தமிழிலும் கையெழுத்து போட்டது போல அவை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

6) 2010 ல் எழுதிய பாக பத்திரம் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட 50 செண்ட் குழந்தைவேலுக்கு விற்றுவிட்டேன். அதே 50 செண்டில் மீண்டும் 25 செண்ட் வாங்கியது போல் என் பெயரில் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி பொது குடும்ப சொத்துகளில் என் அம்மாவிடமோ, என் சகோதரிடமோ கையெழுத்து பெறாமல் பாக பத்திரம் செல்லாது என்று தெரிந்து குழந்தைவேலுக்கு 24.11.2014 ல் ஒரு கிரைய பத்திரமும், அவரிடம் இருந்து மீண்டும் 12.10.2015 ல் நான் கிரையம் செய்ததாக ஒரு கிரைய பத்திரம் எழுதி உள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7) நான் அது போல் கிரையம் செய்து கொடுத்தாலேயே எனக்கு சொத்தில் எவ்வித முழு உரிமையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய பாகத்தை தான் விற்றேன். எனக்கு தாவா சொத்துக்களில் 1/4 பாக உரிமையும், பாலகிருஷ்ணனுக்கு 1/4 பாக உரிமையும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தனியாக நான் செலவு செய்தேன். சாட்சி மேற்படி சொத்தில் தான் தனியாக கிணறு வெட்டி செலவு செய்து சர்வீஸ் வாங்கியுள்ளதாக சொல்கிறார். என் தங்கைக்கும், என் தாயாருக்கும் சொத்தின் பட்டா எதுவும் அவர்கள் பெயரில் மாறவில்லை. அது பூர்வீக வீடு.

8) என் பெயரில் பெற்ற பாக பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் ஆகிவிட்டது. நான் வருவாய் துறையை ஏமாற்றி சட்டப்படி செல்லாத ஆவணம் அடிப்படையில் என் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டதால் செல்லாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் நான் குழந்தைவேலுக்கு கிரையம் செய்து கொடுத்து, மீண்டும் கிரையம் பெற்றேன். நான் வாதியின் பாகத்தையும், என்

தாயாரின் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2015ம் வருடம் 4,5, பிரதிவாதிகளுக்கு கிரையப்பத்திரத்தை தயார் செய்யப்பட்டுள்ளதால் அவை ரத்து செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும் வரை யாருக்கும் எவ்வித சொத்தும் எழுதி வைக்கவில்லை.

9) எனவே அவர் இறப்பிற்கு பின்னிட்டு மேற்படி சொத்துகளில் அவரின் வாரிசுகளான தலா 1/4 பாகம் கிடைக்கத்தது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ரூ. 3 இலட்சம் செலவு செய்து திருமணம் செய்து வைத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரரும் வாதிக்கும் , என் தாயாருக்கும் சட்டப்படி சேரவேண்டிய 1/4 பாகத்தை கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

10) பாகம் பிரித்து கொடுக்கும் வரை சொத்தை விற்கவோ, விற்கிரையம் செய்யவோ எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதியின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். நான் வாதியின் பாகத்தை ஏமாற்ற பதிவு செய்யப்படாத விடுதலை பத்திரம், அபிடவிட் மற்றும் பாக பத்திரத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக ஆலோசனை கேட்டு பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல.

11) அதனால் வாதி தாவாவில் கோரியுள்ள படி தாவா சொத்தில் 1/4 பாகமாக பிரித்து தனி சுவாதீனம் கொடுக்கவும், நானும், 4,5 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த

கிரையப்பத்திரங்கள்  ரத்து செய்யப்படவேண்டும் என்றும், வாதி வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும்  என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**